## யூன்– 04 – திங்கள்

**புனித பிரான்சிஸ் கர்ச்சியோலா**

**“கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று” (மாற் 12 :10)**

### முதல் வாசகம் : 2 பேதுரு 1 : 1– 7

நம் கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவினால் விளைந்த ஏற்புடைமையின் அடிப்படையில் எங்களைப் போன்ற மதிப்புயர்ந்த நம்பிக்கையைப் பெற்றுள்ளோருக்கு, இயேசு கிறிஸ்துவின் பணியாளனும் திருத்தூதனுமான சீமோன் பேதுரு எழுதுவது்கடவுளையும் நமது ஆண்டவராகிய இயேசுவையும் நீங்கள் அறிவதன் வாயிலாக உங்களுக்கு அருளும் நலமும் பெருகுக! தம்முடைய மாட்சியாலும் ஆற்றலாலும் கடவுள் நம்மை அழைத்துள்ளார். அவரை அறிந்துகொள்வதன் மூலம் இறைப்பற்றுடன் வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் அவர் தம் இறை வல்லமையால் நமக்கு அருளியுள்ளார். தீய நாட்டத்தால் சீரழிந்துள்ள உலகைவிட்டு விலகியோடி இறைத்தன்மையில் பங்கு பெறுங்கள். இதற்கென்றே கடவுள் நமக்கு உயர்மதிப்புக்குரிய மேலான வாக்குறுதிகளை அளித்துள்ளார். ஆகையால் நீங்கள் உங்கள் நம்பிக்கையோடு நற்பண்பும்,நற்பண்போடு அறிவும், அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு மன உறுதியும், மன உறுதியோடு இறைப்பற்றும், இறைப்பற்றோடு சகோதர நேயமும்,சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரே நீரே நான் நம்பியிருக்கும் இறைவன்.

### நற்செய்தி : மாற்கு 12 : 1 – 12

அக்காலத்தில் இயேசு அவர்களிடம் உவமைகள் வாயிலாகப் பேசத் தொடங்கினார் ”ஒருவர் ஒரு திராட்சைத் தோட்டம் போட்டுச் சுற்றிலும் வேலியடைத்து, பிழிவுக்குழி வெட்டி, ஒரு காவல் மாடமும் கட்டினார். பிறகு தோட்டத் தொழிலாளர்களிடம் அதைக் குத்தகைக்கு விட்டுவிட்டு நெடும்பயணம் மேற்கொண்டார். பருவகாலம் வந்ததும் அத்தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து திராட்சைப் பழங்களைப் பெற்று வருமாறு ஒரு பணியாளரை அவர் அனுப்பினார். ஆனால் அவர்கள் அவரைப் பிடித்து நையப்புடைத்து வெறுங்கையராய் அனுப்பினார்கள். மீண்டும் அவர் வேறொரு பணியாளரை அவர்களிடம் அனுப்ப, அவரையும் அவர்கள் தலையில் அடித்து அவமதித்தார்கள். அவர் மேலும் ஒருவரை அனுப்ப, அவரையும் கொலை செய்தார்கள் அவர் வேறு பலரையும் அனுப்பினார். அவர்களுள் சிலரை நையப்புடைத்தார்கள் சிலரைக் கொன்றார்கள். ன்னும் எஞ்சியிருந்தவர் ஒருவரே. அவர் அவருடைய அன்பு மகன், தம்மகனை அவர்கள் மதிப்பார்கள் என்று அவர் நினைத்துக்கொண்டு இறுதியாக அவரை அவர்களிடம் அனுப்பினார். அப்பொழுது அத்தோட்டத் தொழிலாளர்கள், ”இவன்தான் சொத்துக்கு உரியவன் வாருங்கள் நாம் இவனைக் கொன்றுபோடுவோம். அப்போது சொத்து நமக்கு உரியதாகும்” என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள். அவ்வாறே அவரைப் பிடித்துக் கொன்று திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே எறிந்துவிட்டார்கள். திராட்சைத் தோட்ட உரிமையாளர் என்ன செய்வார்? அவர் வந்து அத்தொழிலாளர்களை ஒழித்துவிட்டுத் திராட்சைத் தோட்டத்தை வேறு ஆள்களிடம் ஒப்படைப்பார். ”கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று. ஆண்டவரால் நிகழ்ந்துள்ள இது நம் கண்களுக்கு வியப்பாயிற்று” என்னும் மறைநூல் வாக்கை நீங்கள் வாசித்தது இல்லையா?” என்று அவர் கேட்டார். தங்களைக் குறித்தே அவர் இந்த உவமையைச் சொன்னார் என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டு அவரைப் பிடிக்க வழிதேடினார்கள் ஆனால் மக்கள் கூட்டத்துக்கு அஞ்சினார்கள் ஆகவே அவரை விட்டு அகன்றார்கள்.

**தியானம்:** குடுப்பத்தால், சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்டவர்கள் மிக சிறந்தவர்களாக மாறுவதும், உயர்வாக நினைத்தவர்கள் தமது செயல்களால் தாழ்ந்து போவதும் நாம் காண்கின்ற நிகழ்வுகள். இன்றைய நற்செய்தியில் யேசு தமக்கு நிகழ இருப்பதை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றார். அண்மையில்கூட ஆப்கானிஸ்த்தானில் ஒரு பி பி சி செய்தியாளர் படுகொலை செய்யப்பட்டார். எமது இலங்கை தேசத்தில் யுத்த காலங்களில் எத்தனை செய்தியாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். உண்மையை மக்களுக்கும், உலகத்திற்கும் இவர்கள் கொண்டு வந்ததால் அவர்களின் பேனாக்கள் முடக்கப் பட்டன. அதிகார பீடத்தை இவர்களின் செய்திகள் கடுமையாக தாக்கியது, மறைக்கப் பட்ட உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன. இதனால் இவர்கள் மறைக்கப் பட்டார்கள். இவ்வாறாகத்தான் யேசுவின் காலத்திலும் இருந்தது. யேசு தவறு செய்தோரை தட்டிக் கேட்டார். நீதியின் பக்கம், ஏழைகளின் பக்கம் நின்றார். அதிகார வர்க்கத்திற்கு எதிரானவராக பார்க்கப் பட்டார். அதனால் அவர் எதிர்க்கப் பட்டார். கொல்லப்பட்டு புதைக்கப் பட்டார். விதைக்கப்படும் சிறு விதை பெரு விருட்சமாக வளரும் என்பதனை பாவம் அவர்கள் அறிந்திருக்க வில்லை. மரணமும், கல்லறையும் யேசுவிற்கு தடையாக இருக்க வில்லை. காவலை உடைத்து அவர் வெளியே வந்தார். அதனால் கிறிஸ்த்தவம் மலர்ந்தது. முதல் வாசகத்தில் பார்ப்பதுபோல் நாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். எனவே அத்தெரிவிற்கு தகுதியானவர்களாக எம்மை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். எமது வாழ்வால், சொல்லால், செயலால் இறை அரசை அறிவிப்போம். தடைக்கற்களாக இல்லாமல், புறக்கணிக்கப்படுகின்ற கற்களை மூலைக்கல்லாக மாற்றுவோம்.